# 17 வீழ்ந்த ஆலமரம்

வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பார்கள். அந்த நிழலைத் தருவது மரங்கள். மரங்கள் நிறைந்திருப்பது சோலை ஆகும். அந்த மரங்களில் ஆலமரமும் ஒன்று. இது மிகப் பெரிய மரமாய் வளர்ந்து குளிர்ந்த நிழலைத் தருவது. கிளைவிட்டு, விழுதுவிட்டு பரந்த அளவில் விசாலமாய் வளரக் கூடியது. ஆலமரத்தின் பழம் மிகச் சிறிது. அம்மரத்திலே பல உயிரினங்கள் குடியிருக்கும். ஆலமரத்துக்குத் தமிழ்தாத்தா உ. வே சாமிநாதய்யர் அவர்களை உவமித்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மேலும் கட்டுரையில் தமிழ்த்தாத்தாவின் தமிழ்ப்பற்று விதந்துரைக்கப்பட்டுள்ளது.



எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடத்தின் அருகில் சாலை ஓரத்தில் ஆலமரம் ஒன்று வானோங்கி வளர்ந்திருந்தது. அதன் கிளைகள் நாலாபுறமும் விசாலமாகத் தழைத்து விழுது விட்டு நெடுந்தூரம் பசுமையாகப் படர்ந்து குளிர்ந்த நிழலைத் தந்து வந்தன. வெய்யில் காலத்தில் மத்தியான நேரத்தில் ஆயிரக்கணக்கான பட்சிகள் அந்த ஆலமரத்தில் தங்கி விதவிதமான குரல்களில் இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருக்கும். ஊதாச் சிவப்பு நிறம் வாய்ந்த ஆலங்கனிகள் முழுசாகவும் பட்சிகளால் பாதி கொத்தித் தின்னப் பட்டவையாகவும் தரையெல்லாம் உதிர்ந்து கிடக்கும் காட்சி கண்களுக்கு விருந்தாயிருக்கும்.

அந்த ஆலமரம் இருந்த இடமானது இப்போது வெறுமையாயிருக்கிறது என்பதை எண்ணும்போது என் கண்களில் நீர் துளிக்கிறது. ஆம் சில வருடங்களுக்கு முன்னால் அடித்த பெரும் புயல்காற்றில் அந்த ஆலமரம் விழுந்து விட்டது. லோகல் பண்டு இலாகா உத்தியோகத்தர்கள் அதை ஏலம் போட்டார்கள். ஏலம் எடுத்தவன் மரத்தைத் துண்டுதுண்டாய் வெட்டி எடுத்துக்கொண்டு போய் விட்டான். புயல் அடித்த சிறிது காலத்துக்குப் பிறகு நான் எங்கள் கிராமத்துக்குப் போனபோது அந்த ஆலமரம் இருந்த இடத்தில் ஒரு பெரிய குழி இருப்பதைக் கண்டேன். அந்தக் காட்சி என்னை என்னவோ செய்தது. அந்த உணர்ச்சியை என்னால் விவரிக்க முடியாது.

எங்கள் கிராமத்தைப் போலவேதான் தமிழுலகம் இன்று வெறிச்சிட்டுப் போயிருக்கிறது. விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு வளர்ந்திருந்த ஆலமரம் வீழ்ந்ததைப் போல தமிழ்த் தாத்தா உ.வே.சாமி நாதய்யர் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார். திருவட்டீசுவரன் பேட்டை தியாகராஜ விலாசத்தின் மேல்மாடியில் தமிழ்த் தாத்தா இன்று இல்லை; படுத்த வண்ணம் ஓலைச் சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை என்பதை நினைத்தால் நெஞ்சை என்னவோ செய்கிறது. தமிழ்த் தாத்தா போய்விட்டார். அவருடைய ஸ்தானம் இனி எக்காலத்தில் பூர்த்தியாகப் போகிறது?

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அவர் அப்படிப்பட்ட தொண்டைச் செய்து வந்தார். அத்தகைய தொண்டை இதற்கு முன் யாரும் செய்ததுமில்லை. இனிமேல் செய்யப்போவதுமில்லை. அவருடைய மரணத்தினால் தமிழுலகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நட்டம் பூர்த்தி செய்ய முடியாத நட்டமேயாகும்.

டாக்டர் உவே. சாமிநாதய்யர் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அநேகர் பெயரளவில் மட்டும் கேள்விப்பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியங்களை அவர் கண்டுபிடித்து அச்சேற்றித் திருத்தமான உயர்ந்த பதிப்புகளாக வெளியிட்டார். அவற்றில் ‘சீவகசிந்தாமணி’ ‘சிலப்பதிகாரம்’, ‘மணிமேகலை’, ‘புறநானூறு’, ‘பத்துப்பாட்டு’ என்னும் நூல்கள் முக்கியமானவை. இந்த நூல்களைக் கண்டுபிடித்து வெளியிடும்

முயற்சியில் அவர் அடைந்த சிரமங்களுக்கு அளவேயில்லை. எத்தனையோ வித எதிர்ப்புகளும், எதிரிகளும் அவருக்கு ஏற்பட்டார்கள். அவருடைய எதிரிகளில் முக்கியமான எதிரி கறையான்! கறையான் படைகளுடன் அவர் நடத்திய போரை ஓரிரு வார்த்தைகளில் எழுத முடியாது. புகையிரத பாதைக்கு வெகுதூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், ஏதோ ஒரு வீட்டின் பரணில், ஓர் ஓலைச்சுவடி கிடக்கும். இதை ஆகாரமாக உட்கொண்டு விடுவதென்ற தீர்மானத்துடன் கறையான் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கும். இதே சமயத்தில் மேற்படி ஓலைச்சுவடி மேற்படி வீட்டுப் பரணில் இருப்பதனை எப்படியோ தெரிந்து கொண்டு விடுவார். புகையிரதமோ, கட்டை வண்டியோ, கால் நடையோ - எதுவாயிருந்தாலும் அவருக்கு லட்சியமில்லை. பகல் இராத்திரி என்று பாராமல் ஓடிவருவார்.

கறையான்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவரில் ஏறி, உத்திரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு முன்னேறி, நாளுக்கு நாள் ஓலைச் சுவடியை நெருங்கிக்கொண்டிருக்கும். இதோ ஓலைச்சுவடி கிடக்கும் இடம் அவற்றின் பார்வைக்கு வந்துவிட்டது.

'பேஷ்! பல நாளைக்கு ஆகாரம் ஆயிற்று' என்று அவை கும்மாளம் அடித்துக் கொண்டு நெருங்குகின்றன. ஓலைச் சுவடியை ருசியும் பார்த்தாகிவிட்டது. நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு அவை சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்குகின்றன. அப்பேர்ப்பட்ட சமயத்தில் அந்த வீட்டைத் தேடி வந்து சேருகிறார் ஸ்ரீ உவே. சாமிநாத ஐயர். வீட்டு எஜமானைப் பார்த்து, 'ஐயா! உங்கள் வீட்டில் பழைய ஓலைச் சுவடி ஒன்று இருக்கிறதாமே?' என்று கேட்கிறார்.

'பரண் மேலே கிடந்தது. எதற்குக் கேட்கிறீர்கள்?' என்கிறார் வீட்டுக் காரர்.

அவரிடம் ஸ்ரீ சாமிநாத ஐயர் பழந்தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பற்றிப் பேசி, ஓலைச் சுவடியைப் பார்க்க வேண்டும் என்கின்றார். இதற்குள் சுவரில் உள்ள கறையான் கூட்டின் மேல் ஸ்ரீ சாமிநாத ஐயரின் பார்வை விழுகிறது. 'ஐயையோ! பரண் மேல் கறையான் ஏறிக் கொண்டிருக்கிறதே! சுவடி போய்விடப் போகிறதே! உடனே பார்த்தால் தேவலை' என்கிறார் சாமிநாதய்யர்.

அவருடைய பதைபதைப்பை வீட்டுக்காரர் பார்த்துவிட்டு, பரண்மேல் ஏணி வைத்து ஏறி ஓலைச்சுவடியை எடுத்துக் கீழே போடுகிறார்.

சுவடியின் ஓரங்களில் கறையான் வாய் வைத்திருக்கும் அடையாளங்கள் தெரிகின்றன.

ஸ்ரீ சாமிநாதய்யர் அதை அவசரமாக உதறி எடுத்துத் தம் சிரம் மீது வைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

பிறகு ஓலைச்சுவடியைப் பிரித்துப் பார்க்கிறார். ஐயரின் கண்கள் விரிகின்றன. வியப்பினால் அல்ல அளவிலாத ஏமாற்றத்தினால்! ஏனெனில், அவர் தேடிவந்த பழந்தமிழ் நூல் ஒன்றும் அந்த ஓலைச் சுவடியிலில்லை. சமீப காலத்தில் எழுதப்பட்ட உபயோகமற்ற ஸ்தலபுராணம் அது. 'இவ்வளவுதானா?' என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறார். 'இதுவும் ஒரு மூலையில் கிடக்கட்டும்; ஏதாவது பிரயோஜனப்படும்' என்று எண்ணி ஓலைச் சுவடியை எடுத்துக் கொண்டு கிளம்புகிறார். எங்கே? இன்னொரு ஊரில் இன்னொரு வீட்டுப் பரணில் கிடக்கும் இன்னொரு ஓலைச்சுவடியைத் தேடிக் கொண்டுதான்!

தமிழன்பு என்பது இந்தக் காலத்தில் தமிழ் மக்களிடையே பரந்து பரவியிருக்கிறது. 'தமிழன்பு' பற்றி அடிக்கடி பேசுகிறோம்; எழுதுகிறோம்; தமிழுக்குத் தொண்டு செய்கிறவர்களைப் பாராட்டுகிறோம். அத்தகைய பாராட்டுக் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடுகிறார்கள்; ஆரவாரிக்கிறார்கள்.

டாக்டர் சாமிநாதய்யர் தமிழ்த் தொண்டு ஆரம்பித்த காலத்தில் இப்படிப்பட்ட தூண்டுதல் ஒன்றுமே கிடையாது. எங்கேயாவது அத்தி பூத்தது போல் ஒரு ஜமீன்தார், ஒரு மடாதிபதி தமிழபிமானம் கொண்டவராயிருந்து தமிழ்த் தொண்டைப் பாராட்டுவார். அவரிடம் ஒடுக்கத்துடன், நல்ல சமயம் பார்த்துப் போய் நிற்க வேண்டும். மற்றபடி தமிழ்த் தொண்டுக்கு அந்நாளில் கௌரவம் கிடையாது. தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் ஆங்கில இராணியின் முன்னால் கைகட்டி நின்று பணிவிடை செய்த காலம். அத்தகைய காலத்தில் டாக்டர் சாமிநாதய்யர் தமிழ்த் தொண்டைத் தொடங்கினார். இடைவிடாமலும் சோர்வடையாமலும் செய்து வந்தார். தமிழன்பு என்பது பணியில்

ஆர்வமானது அவருடைய சதை நரம்புகளில் கலந்து, மூச்சு விடுவதைப் போல் இயற்கையோடு இயற்கையாய்ச் சேர்ந்திருக்க வேண்டும். அத்தகைய தமிழன்பரை - தமிழ்த் தொண்டரை - இனி எங்கே காணப் போகிறோம்?

**கல்கி**

**அரும்பதங்கள்**

சாலை - வீதி
விசாலம் - பரந்து
பட்சிகள் - பறவைகள்
கும்மாளம் - சந்தோஷம், ஆனந்தம்
இலாகா - திணைக்களம்
ஆகாரம் - உணவு
ஓலைச்சுவடி - பழங்காலத்தில் பனை ஓலையில் எழுதியவை
பதைபதைப்பை - அவசரத்தை
பரண் - வீட்டில் உயரமாய் இருப்பது
சிரமீது - தலை மீது
ஸ்தலபுராணம் - கோயில் வரலாறு

**கிரகித்தல் பயிற்சி**

1. ஆலமரம் பற்றிய வர்ணிப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
2. ஆலமரத்தில் வெயில் காலத்தில் தங்கி குரல் எழுப்புவன என்று எதைக் குறிப்பிடுகின்றார்?
3. ஆலமரப் பழத்தின் நிறம் எது என்று குறிப்பிடப்படுகின்றது?
4. ஆலமரம் எதனால் வீழ்ந்தது?
5. ஆலமரம் வீழ்ந்ததை யார் இறந்தது போல என்று கூறப்படுகின்றது?
6. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அச்சேற்றிய தமிழ் இலக்கியங்கள் எனக் கூறப்படுவன எவை?
7. உ. வே. சாமிநாதய்யரின் முக்கிய எதிரி என்று கூறப்படுவது யாது?
8. இக்கட்டுரையில் காட்டப்படும் உவமைத் தொடரொன்றை எடுத்துக் காட்டி விளக்குக.
9. உ.வே. சாமிநாதய்யர் தமிழுக்கு செய்த தொண்டு பற்றி கட்டுரை வரைக.

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. குழுவாகப் பிரிந்து மரங்களாக உங்களை உருவகித்து, மரங்களின் நன்மைகள் என்ற தலைப்பில் நாடகம் நடிக்க.
2. மரங்களின் பெயரைக் கொண்டு பன்னிரண்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.
3. உ.வே. சாமிநாதய்யர் பற்றி தேடித் தொகுக்குக.

# வேற்றுமை

வாக்கியத்தில் பெயர்ச்சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவது வேற்றுமை எனப்படும்.

★ இலக்கியா பாடினாள்.
★ இலக்கியாவைப் போன்றவள்.
★ இலக்கியாவினால் எழுதப்பட்டது.
★ இலக்கியாவின் கவிதை.
★ இலக்கியாவினது புத்தகம்.

இவ்வாக்கியங்களினால் இலக்கியா என்னும் பெயர்ச்சொல் வினைச் சொற்களுக்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளது என்பதைப் பாருங்கள்.

- வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியவையாகும். பெயர்ச்சொற்களின் இறுதியில் இவ்வாறான உருபுகள் வந்து பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும்.

- பெயர்சொற்களின் சிறப்பு, வேற்றுமை உருபுகளை ஏற்பது.

- ஒவ்வொரு வேற்றுமைக்கும் தனித்தனி உருபுகளும் பொருளும் உண்டு. சில வேற்றுமைகளுக்கு சொல்லுருபுகளும் உண்டு என்பர்.

## முதலாம் வேற்றுமை

பெயர்ச்சொல் ஒரு வாக்கியத்தின் எழுவாயாக வருமானால் அது முதலாம் வேற்றுமை எனப்படும். இதனால் எழுவாய் வேற்றுமை என்றும் அழைப்பர். இவ் வேற்றுமைக்கு உருபு கிடையாது. ஆனால் சொல்லுருபுகள் உண்டு.

உ - ம் - தமிழினி வந்தாள்.
சூரியன் உதித்தான்.

**சொல்லுருபுகள்** -
என்பவள், என்பவன், என்பவர், என்பது, என்பவை, ஆனவன், ஆனவள்.

உ - ம் தமிழினி என்பவள் வந்தாள்.

## இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை உருபு ‘‘ஐ’’ ஆகும். இவ்வுருபானது செயப்படுபொருளை உணர்த்தி வருவதனால் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் அழைக்கப்படும். இவ் வேற்றுமை பின்வரும் ஆறு பொருளை உணர்த்தும்.

| | |
|---|---|
| ஆக்கல் | - வீட்டைக் கட்டினான் |
| அழித்தல் | - கதிரையை உடைத்தான் |
| அடைதல் | - பாடசாலையை அடைந்தான் |
| நீத்தல் | - ஊரை விட்டுச் சென்றான் |
| ஒத்தல் | - மலரைப் போன்றவள் |
| உடைமை | - பணத்தை வைத்திருந்தான் |

## மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், ஒடு, ஓடு முதலியன கொள்ளப்படுகின்றன. இவற்றுள் ஆல், ஆன் ஆகியன கருவி கருத்தா பொருளையும் ஒடு, ஓடு ஆகியன உடனிகழ்ச்சிப் பொருளையும் உணர்த்தி வரும்.

உ - ம் கத்தியால் வெட்டினான் - ஆல் - கருவிப் பொருள்
மந்திரியால் கட்டப்பட்ட கோயில் - ஆல் - கருத்தாப் பொருள்
தந்தையோடு மகள் சென்றாள் - ஒடு - உடனிகழ்ச்சிப் பொருள்

இவ்வேற்றுமைக்கு கொண்டு, உடன் என்ற சொல்லுருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

உ - ம் - கத்தி கொண்டு வெட்டினான்.
தந்தையுடன் மகள் சென்றாள்.

- வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டும் வெளிப்படாமலும் நின்று தொழிற்படுவதும் உண்டு.

வெளிப்பட்டு நின்றால் வேற்றுமை விரி என்பர்
உ - ம் வீட்டைக் கட்டினான்.
வீடு + ஐ = வீட்டை

வெளிப்படாமல் நின்றால் வேற்றுமைத் தொகை என்பர்.
உ - ம் வீடு கட்டினான்.

**பயிற்சி**

1. வேற்றுமை என்றால் என்ன?
2. முதலாம், இரண்டாம், மூன்றாம் வேற்றுமை உருபுகளைக் கூறுக.
3. முதலாம் வேற்றுமையை வேறு எப்பெயரால் அழைப்பர்?
4. இரண்டாம் வேற்றுமை உருபு, பொருளைக் கூறுக.
5. மூன்றாம் வேற்றுமை எப்பொருள்களை உணர்த்தும்?
6. வேற்றுமை உருபு, வெளிப்பட்டும் வெளிப்படாமலும் நின்று தொழிற்படுவதற்கு மூன்று உதாரணம் தந்து விளக்குக.